வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3455/அ5/2024 நாள்:20.09.2024

பொருள்: தமிழ்நாடு அடிப்படைப்பணி – அலுவலக உதவியாளர் /இரவுக்காவலர் /துப்புரவாளர் பதவியில் இருந்து – பதிவறை எழுத்தராக பதவி உயர்வு வழங்குதல் 01.12.2023 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் உத்தேச பெயர் பட்டியல் வெளியிடுதல் – சார்பு

பார்வை : 1.அரசாணை நிலை எண் 151 பள்ளிக் கல்வி (எஸ்இ1(1) துறை நாள் 09.09.2022
2. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
ந.க.எண். 070358/அ5/இ4/2022 நாள்: 19.08.2024

********************************

பார்வை(2)–இல் காணும் செயல்முறைகளின்படி அலுவலகங்கள் மற்றும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை பணியாளர்களாக பணிபுரிந்து வரும் அலுவலக உதவியாளர்கள், துப்புரவாளர்கள் மற்றும் இரவுக் காவலர்களுக்கு வருவாய் மாவட்டஅளவில் பதிவறை எழுத்தர் பதவி உயர்விற்கான தற்காலிக உத்தேச பெயர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பில் கண்டுள்ள பெயர் பட்டியலில் தகுதியுடையவர்களின் விவரங்கள் ஏதேனும் விடுபட்டிருந்தாலோ அல்லது புதிதாக சேர்க்கப்பட வேண்டிய தகுதியுடைய பணியாளர்கள் இருந்தாலோ, இதில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தாலோ மூன்றாண்டு தற்காலிக உரிமைவிடல் செய்தவர்கள் எவரேனும் இருந்து, பெயர் விடுபட்டிருப்பின் சேர்க்க வேண்டியவர்கள் அவ்விவரங்களை உடன் உரிய படிவத்தில் மேற்முறையீட்டு விண்ணப்பத்துடன் (23.09.2024) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக அ5 பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டும். மேலும் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் சார்ந்த பணியாளர்களுக்கு தகவல் தெரிவிக்க மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(**குறிப்பு:–** முன்னுரிமை பட்டியலில் வ.எண் 1 முதல் 30 வரை இடம் பெற்றுள்ள பணியாளர்கள் இவ்வலுவலவகத்தில் 23.09.2024 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்குள் நேரில் விவரங்களை சரிபார்த்து கையொப்பமிட சார்ந்த பணியாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது)

இணைப்பு:–
முன்னுரிமைப் பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர்
2. தலைமை ஆசிரியர்கள்
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி
வேலூர்